Registered as a Newspaper

பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 09

செவ்வாய்க்கிழமை
05 டிசெம்பர் 2023

கார்த்திகை 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"இனி முழுநாடுமே இருட்டுக்கத்தானே மூழ்கப்போகுது பாருங்கோ"

## 5 லட்சம் பேர் இருட்டுக்குள்

கொழும்பு, டிசெ. 5

நாட்டில் அநீதியான முறையில் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதால் 5 இலட்சம் பேரின் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. லட்சக்கணக்கானோருக்கு சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

'நாட்டில் கனமழை பெய்தது. நீர்மின் உற்பத்தி அதிகரித்தது. இலங்கை மின்சாரசபை பெரும் இலாபம் ஈட்டியது. நீர்மின் உற்பத்தி அதிகரித்து மின்சாரசபை கோடிகோடியாக இலாபம் ஈட்டும்போது, தேவையில்லாமல் மின் கட்டணத்தை அதிகரித்து 50 இலட்சம் பாவனையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. இது நியாயமா?' என்று கேள்வி எழுப்பினார். (அ-ஓ-44)

## சிறாருக்கு புலிகளின் ஆடை; நடக்கக்கூடாத சம்பவம் அது!!!

கொழும்பு, டிசெ. 5

மாவீரர் தினத்தன்று வடக்கிலே சிறார்களை பயங்கரவாதிகளாக்கிய சம்பவம், இந்நாட்டில் நடந்திருக்கக்கூடாத ஒன்று. கவலையளிக்கின்றது என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர், இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் மாவீரர் தின நிகழ்வு இடம்பெற்றது. சிலர் புலிப்பயங்கரவாதிகள்போல் ஆடை அணிவித்து, கழுத்தில் சயனைட் 11

## வாள்வெட்டுக் குழு அட்டகாசம்; பொலிஸார் துப்பாக்கிச் சூடு

### தெல்லிப்பழையில் பரபரப்பு சந்தேகநபர் கைது



யாழ்ப்பாணம், டிசெ. 5

தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் ஹை-ஏஸ் வாகனத்தில் வந்த வாள் வெட்டுக் குழு மோட்டார் சைக்கிள்களில் பயணித்த இளைஞர்கள் சிலரை 11



# டெங்கு வீரியம்!

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெம்பர் 5

யாழ். மாவட்டத்தில் குறிப்பாக நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், வேகமாகப் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பொது மக்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டும் என யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி. ஆ.கேதீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார். 11

## டெங்கு தடுப்பு உதவியாளர்கள் தொடர் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 5

நிரந்தர நியமனத்தை வலியுறுத்தியும், கடந்த இரு மாதங்களுக்குரிய கொடுப்பனவு வழங்கப்படாமையைக்கண்டித்தும், சம்பள உயர்வை வலியுறுத்தியும் யாழ். மாவட்ட டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் தொடர் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

யாழ். மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முன்பாக நேற்றுத் திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் ஒன்று 11

## தாய்ப்பால் புரையேறி சிசு உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 5

தாய்ப்பால் புரையேறியதில் பிறந்து 26 நாள்களேயான பச்சிளம் குழந்தையொன்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது.

மிருசுவிலைச் சேர்ந்த தாசன் அஸ்வின் என்ற ஆண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தை பிறந்தது முதல் யாழ்ப்பாணம் போதனா 11

சித்தன்கேணி இளைஞன் கொலை:

## சாட்சி வராமையால் அணிவகுப்பு ஒத்திவைப்பு

### தொடர் விசாரணை இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 5

சித்தன்கேணி இளைஞன் விளக்கமறியலில் கொலை செய்யப்பட்ட வழக்கில் பிரதான சாட்சி வருகை தராத நிலையில் அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 8ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதுடன் தொடர் விசாரணை இன்று 10

## நீதிமன்றில் குழப்பம்; பொலிஸுக்கு மறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 5

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மது போதையில் விசாரணைக்கு இடையூறு விளைவித்த பொலிஸ் அலுவலர் 11

## க.பொ.த. சாதாரண தரம்; பாடங்கள் குறைக்கப்படும்

### கல்வி அமைச்சு

கொழும்பு, டிசெ. 5

பாடசாலை தரங்களின் எண்ணிக்கையை 13 இல் இருந்து 12 ஆகக் குறைப்பதற்கும், க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் 9 பாடங்களிலிருந்து 7 பாடங்களாகக் குறைப்பதற்கும் முன்மொழியப்பட்டிருப்பதாக உத்தேச புதிய கல்வி மறுசீரமைப்பை வெளியிட்டு கல்வி அமைச்சு 11

ஆசிரியை தாக்குதல்:

## அகற்றப்பட்டது மாணவனின் நகம்

யாழ்ப்பாணம், டிசெ. 5

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலையில் ஒன்பது வயது மாணவனை ஆசிரியை ஒருவர் தாக்கியதால், மாணவனின் நகம் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளது.

ஒரு வாரத்துக்கு முன்னர் 4ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவனுக்கு, அப்பியாசப் புத்தகத்தில் ஒழுங்காக 11

## படைகளின் ஆக்கிரமிப்பை தடுக்க அணிதிரளுங்கள்

### சரவணபவன் அறைகூவல்



யாழ்ப்பாணம், டிசெ. 5

பௌத்த - சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் சிறிலங்கா அரசாங்கத்தின் அனைத்துத் திணைக்களங்களும், தமிழர் தாயகத்தை 11

## போதையால் இளையோரை கொல்கிறது அரசாங்கம்


### வினோநோகராதலிங்கம் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 5

வடக்கில் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனை மூலம் தமிழ் இளைஞர்கள் மறைமுகமாக கொல்லப்பட்டு வருகின்றனர். இதற்கு பொலிஸாரும் உடந்தையாக இருக்கின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குற்றங்கள்

### சிசு கொலை

கொழும்பு, டிசெ.5
மாலைதீவில் சிசுவொன்றைக் கொலை செய்த குற்றச்சாட்டில் இலங்கைப் பணிப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இரகசியமாகச் சிசுவைப் பிரசவித்து, அதைப் பையொன்றில் இட்டுக் கைவிட்டுச் சென்றார் என்று பணிப்பெண் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (எ-இ)

### போதை மாத்திரை விற்றவர்கள் கைது

கொழும்பு, டிசெ.5
அநுராதபுரத்தில் பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து போதை மாத்திரை விற்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

### கணவன் கொலை மனைவி கைது

கொழும்பு, டிசெ.5
கணவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இரும்புக் கம்பியால் தாக்கியதாகக் கூறப்படும் கணவரிடம் இருந்து தப்பிக்க முற்பட்ட மனைவி தனது கணவரின் கண்களில் மிளகாய் பொடியை தூவி கழுத்தில் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார் என்று வெல்லவ பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

### விடுதி ஊழியர் கொலை

கொழும்பு, டிசெ.5
வத்தளை பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பணியாற்றிய 68 வயதுடைய ஹோட்டல் ஊழியர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் வத்தளை பொலிஸார் மற்றும் பேலியகொட பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

### சான்றுப்பொருளை விற்றவர்கள் கைது

கொழும்பு, டிசெ.5
மாத்தறை நீதவான் நீதிமன்றின் களஞ்சியசாலையில் இருந்த சான்றுப்பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் துப்பாக்கிகள் மற்றும் போதைப் பொருள்களை விற்பனை செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (எ-இ)

# சாம்பல் பட்டியலை தவிர்க்க இலங்கை கடும் போராட்டம்

கொழும்பு, டிசெ.5
**பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தலை கண்காணிக்கும் சர்வதேச அமைப்பான, நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழு, இலங்கை தொடர்பான தனது பரஸ்பர மதிப்பீட்டு விசாரணையை 2025 மார்ச் மாதம் ஆரம்பிக்கவுள்ளது.**

இந்த மதிப்பீட்டில் இலங்கையை வெற்றியடையச் செய்வதற்கான பெரும் சவால்மிக்க நடவடிக்கைகளில் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவு மும்முரமாக உள்ளது.

இந்தப்பிரிவின்மேலதிகப்பணிப்பாளர்கலாநிதி சுபானி கீர்த்திரத்ன தெரிவித்துள்ளதாவது:- நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் இலங்கை மீதான மதிப்பீடுகள் அச்செயலணிக் குழுவுக்கு திருப்தியளிக்காவிட்டால், கறுப்பு அல்லது சாம்பல் நிறப் பட்டியலில் உள்ளடக்கப்படலாம். இத்தகைய பட்டியலில் உள்ளடக்கப்படுவதால் ஏற்படும் இழப்புகள் பாரதூரமானவை.

2011 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இரு தடவைகள் இலங்கை சாம்பல் பட்டியலுக்கு உட்பட்டிருந்தது. தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைக்கு மத்தியில், மீண்டும் கறுப்பு அல்லது சாம்பல் நிறப் பட்டியலில் இலங்கை உள்ளடக்கப்பட்டால் அதனால் ஏற்படும் பாதிப்புகளை இலங்கை தாங்காது - என்றார். (எ-இ)



## அஸ்வெசும கொடுப்பனவு வைப்பு

கொழும்பு, டிசெ.5
அஸ்வெசும நலன்புரி உதவித் தொகையைப் பெறும் 14 இலட்சத்து 6 ஆயிரத்து 932 குடும்பங்களின் ஒக்ரோபர் மாதத்துக்கான கொடுப்பனவு வைப்பிலிடப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (எ-இ)

## விழிப்புலன் அற்றோருக்கு விசேட வாக்குச் சீட்டுகள்

கொழும்பு, டிசெ.5
தேசிய ரீதியில் நடைபெறும் அடுத்த தேர்தலில் விழிப்புலன் அற்ற வாக்காளர்களுக்காக ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் தொட்டுணரக் கூடிய விசேட வாக்குச் சீட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விசேட தேவையுடையவர்களுக்கு விசேட அடையாள அட்டை ஒன்று வழங்கப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இயலாமையுடைய நபர்களின் உரிமைகளை சட்டரீதியாக நடைமுறைப்படுத்தும் வகையில் புதிய சட்டத்தை உருவாக்க வேண்டியது அவசியம். அவர்களின் பிரதிநிதித்துவம் அரசியலில் இருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)



## சிறப்புரிமை மீறல் சஜித் கடும் எதிர்ப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறிக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு தொடர்பான சகல விடயங்களையும் நீதி இராஜாங்க அமைச்சர் நாடாளுமன்றத்தில் பேசியே, அந்த வழக்கு நடவடிக்கையின் உள்ளடக்க விடயங்கள் முன்வைக்கப்பட்டன. இது சிறப்புரிமைகளை மீறும் நடவடிக்கை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

வழக்கு தொடர்பான தகவல் பத்திரக் கோப்புகள் போன்றவற்றை சபையில் சமர்ப்பிப்பது, ஹன்சாட் பதிவிடுவது தடைசெய்யப்பட்டது மற்றும் இது நெறிமுறையற்ற விடயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## தினசரி மும்பைக்கு இரண்டு விமானம்!

கொழும்பு, டிசெ.5
ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் கொழும்பு மற்றும் மும்பை இடையேதினசரி இரட்டை விமானசேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இது இந்தியாவின் நிதி மற்றும் பொழுதுபோக்கு மூலதனத்துக்குச் செல்லும் பயணிகளின் வசதியைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## பெறுபேறு மீளாய்வு

கொழும்பு, டிசெ.5
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் நேற்று முதல் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 18ஆம் திகதிவரை இணையத்தளம் மூலமாக விண்ணப்பிக்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## அரசாங்க வருமானம் இவ்வாண்டு அதிகம்!

கொழும்பு, டிசெ.5
கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டின் முடிவடைந்த 9 மாதங்களில் அரசாங்கத்தின் வருமானம் 2 ஆயிரத்து 118.8 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு இந்தக் காலப்பகுதியில் அரசின் வருமானம் ஆயிரத்து 450.4 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. (எ-இ)

## எக்ஸ்ரே இயந்திரம் பழுது; நோயாளர் கடும் சிரமம்!

கொழும்பு, டிசெ.5
கொழும்பு தேசிய மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ள எக்ஸ்ரே இயந்திரங்கள் இரண்டும் செயலிழந்துள்ளன என்றும், அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படும் நோயாளர்கள் இதனால் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் பிரதான எக்ஸ்ரே இயந்திரம் பழுதடைந்தது என்றும், அதன் பின்னர் இரண்டாவது இயந்திரத்தின் மூலம் எக்ஸ்ரே பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இங்குள்ள பிரதான எக்ஸ்ரே இயந்திரம், அதிநவீன டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் மூலம் பரிசோதனை அறிக்கைகளை நோயாளர் சிகிச்சை பிரிவுகளுக்கும், சத்திர சிகிச்சை மையங்களுக்கும், மருத்துவருக்கும் சில நொடிகளில் அனுப்பும் திறன் கொண்டது என்றும் குறிப்பிடப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசாரணை வளையத்தில் போதகர் ஜெரோம்

கொழும்பு, டிசெ. 5
ஏனைய மதங்களை இழிவுபடுத்திய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள, சர்ச்சைக்குரிய கிறிஸ்தவ மத போதகர் ஜெரோம் பெர்னாண்டோவின் பணப்பரிமாற்றம் தொடர்பாக குற்ற புலனாய்வுப்பிரிவினர் தனியாக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.
நாட்டை விட்டு வெளியேறி கடந்த வெள்ளிக்கிழமை நாடு திரும்பிய ஜெரோம் பெர்னாண்டோ கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார். அவருடைய நிதிக் கையாள்கை தொடர்பில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம-6)

# அரசியல்வாதிகளுக்கு பொதுப்போக்குவரத்து

### அநுரகுமார திட்டம்



கொழும்பு, டிசெ.5

**அரசியல்வாதிகள் பொதுப்போக்குவரத்தில் பயணம் செய்யும் கலாசாரத்தை உருவாக்குவேன் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

நாங்கள் அந்த மாற்றத்தை அரசியல் கலாசாரத்தை உருவாக்குவோம். வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டை பொறுப்பேற்று பொருளாதாரத்துக்கு புத்துயிர்கொடுப்பதற்கான துணிச்சல் எங்களுக்குள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
(எ-இ)

## அனுமதிப்பத்திரம் புதிய நடைமுறை

கொழும்பு, டிசெ. 5
மதுபான உற்பத்தி நிறுவனங்கள் தமது வரிகள் வருமான வரி, வற், சமூக பாதுகாப்பு வரி உள்ளிட்ட வரிகள் முழுவதையும் நிலுவையின்றிச் செலுத்திய பின்னரே மதுபான நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறை விரைவில் பின்பற்றப்படவுள்ளது.
பதில் இறைவரி ஆணையாளர் நாயகம் ஜெயவர்த்தன இந்தத் தகவலை வெளியிட்டார். (ச-6)

### இறைவரித் திணைக்கள

## இணைய வரிசெலுத்தல் முடிந்தது தோல்வியில்!

கொழும்பு, டிசெ. 5
இறைவரித் திணைக்களத்தின் இணையவழி வரி செலுத்தல் திட்டம் வெற்றியளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இணைய வழியில் வரிசெலுத்துவதற்கான இறுதி நாளாக நவம்பர் மாதம் 30ஆம் திகதியை இறைவரித் திணைக்களம் நிர்ணயித்திருந்தது. இந்தக் காலப்பகுதிக்குள் வரி செலுத்தாதவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்படவுள்ளது. வரியின் 5 வீதத்தை மேலதிகமாகச் செலுத்தவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.
இதனால், ஏகப்பட்ட வரிசெலுத்தல்கள் நவம்பர் மாதம் 30ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
எனினும், இறைவரித் திணைக்களத்தின் பலவீனமான கணினிக் கட்டமைப்பால் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தமுடியவில்லை எனப் பல நிறுவனங்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளன. (ம)

## தேசபந்துக்கு ஆதரவு

கொழும்பு, டிசெ.5
தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமிக்க வேண்டும் என மிஹிந்தலை விகாராதிபதி வலியுறுத்தியுள்ளார்.
பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் மத வழிபாடுகளில் ஈடுபட்டார். அதன் போது கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

## பொதுப்பணிக்கு நிதி திரட்ட 'ஷோ'

கொழும்பு, டிசெ.5
கொழும்பு லேடி றிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் நரம்பியல் சிகிச்சை நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு நிதி திரட்டும் நோக்குடன் கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளால் 'பஷன் ஷோ' ஒன்று நடத்தப்பட்டுள்ளது.
**கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களில் பணியாற்றும் பெண்கள் இந்தப் பஷன் ஷோவில் கலந்துகொண்டனர். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரும் பஷன் ஷோவில் பங்கேற்றார்.** (ச-6)

# தெளிவற்ற சட்டவரைவு

கொழும்பு, டிசெ. 5
கொண்டுவரப்படவுள்ள மின்சார சட்டவரைவில் வெளிப்படைத்தன்மை காணப்படவில்லையென மின்சாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
இந்தப் புதிய சட்டவரைவு தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு நேரம் ஒதுக்கித்தருமாறு எரிசக்தி, மின்சக்தி அமைச்சரிடமும் ஜனாதிபதியிடமும் மின்சாரசபை அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
புதிய சட்டவரைவு செயலுருப்பெற்றால் தேசிய மின்சார ஆலோசனைக்குழு சுயமாக இயங்க மாட்டாது என மின்சாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தேசிய மின்சார ஆலோசனைக்குழு அங்கத்தவர்களை அமைச்சரே நியமிப்பார் எனவும் மின்கட்டண அதிகரிப்புத் தொடர்பான விடயங்களை தேசிய மின்சார ஆலோசனைக் [illegible] சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-6)




இப்ப எல்லாரும் பரபரப்பாக் கதைக்கிறது தமிழரசுக் கட்சியின்ர தேர்தலைப் பற்றித்தான். பத்து வருசத்துக்கு கிட்ட மாவையர் தலைவரா இருந்திட்டார். அதால இந்தமுறை புதுத்தலைமை வேணுமெண்டு கட்சியில உள்ள கனபேர் விரும்பினவை. ஆனால் அப்பிடித் தலைவரா வாறதுக்கு நாலைஞ்சு தரப்புகள் முண்டியடிக்க, வேறவழியில்லாமல் கட்சியின்ர வரலாற்றிலேயே முதல் முறையா தேர்தல் வைச்சு தலைவர தீர்மானிக்க வேண்டியதாப்போட்டுது. கனபேருக்குத் தலைமைப்பதவியில கண் இருந்தாலும் 'போட்டி போட்டுத் தோத்திட்டால் எங்கட அரசியல் எதிர்காலமே பறிபோடுமே' எண்ட பயத்தில கடைசி நேரத்தில பொந்துக்குள்ள புகுந்திட்டினம். இப்ப ரண்டே ரண்டு பேர்தான் களத்தில நிக்கினம் ஒருத்தர் சுமந்திரன், மற்றவர் சிறீதரன்.

இவை ரண்டுபேருமே எல்லாத்திலையும் எதிரெதிர்த் துருவங்கள். ஒராள் உணர்ச்சி அரசியல் செய்யிறவர், மற்றவர் நசுக்கிடாமல் காரியம் பாக்கிறவர். தமிழ்த் தேசியம், புலியள் பற்றியும் ரண்டுபேரிட்டையும் வேற வேற கருத்துத்தான் இருக்கு. கட்சிக்குள்ளையும் ரண்டுதரப்பும் பலமாத்தான் இருக்குது. ஆனாலும் கடைசி நேரத்தில என்னவும் நடக்கக்கூடும். 'ஆர் தலைவரா வந்தாலும் பரவாயில்லை. எனக்குச் செயலாளர் பதவியைத் தந்தால் காணும்' எண்ட மைண்ட் செற்றில தான் மாவையர் இருக்கிறார். அதால ரண்டு தரப்போடையும் இதைப்பற்றி சாடைமாடையாச் சொல்லியுமிருக்கிறார். என்னதான் கட்சிக்குப் பெரியவரா தலைவர் இருந்தாலும், சட்ட ரீதியா செயலாளரின்ர பவர் தான் கூட. அதாலதான் போட்டியில இறங்காமல், செயலாளர் பதவி எண்ட நொங்கை நோகாமல் குடிக்கிறதுக்கு மாவையர் பிளான் பண்ணியிருக் கிறார்.

ஆனால் அந்தப் பிளானுக்கும் ஒரு தரப்பு ஆப்பு வைக்கிறதுக்கு ரெடியாத்தான் இருக்குது. எப்பிடியோ வடக்கில இருக்கிற சுமந்திரனோ, சிறீதரனோ தான் தலைவரா வரப்போகினம். அதால கிழக்குக்குத் தான் செயலாளர் பதவியைத் தரவேணும் எண்டு மாநாட்டில ஒரு தரப்பு உரிமைக் கோரிக்கை வைக்கப்போகுதாம். சாணக்கியனைச் செயலாளர் ஆக்கத்தான் இந்த உரிமைக் கோரிக்கை. இதுக்கு தலைவர் பதவிக்கு போட்டி போடுற ஒராள் தான் பின்னுக்கு நிக்கிறார் எண்டும் கதை. எப்பிடிப் பார்த்தாலும் மாவையர் குறிவைச்சிருக்கிற செயலாளர் பதவியும் கிட்டாது எண்டுதான் பட்சிக்குத் தெரியுது. ஆனாலும் இவ்வளவு நாளும் கட்சிக்கு மாவையர் செய்த சேவையை மனசில வைச்சாவது அவருக்கு உரிய கௌரவத்தைக் குடுக்கோணும்.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விழிப்புணர்வு

யாழ்.டிசெ.5

கோப்பாய்ப் பிரதேச செயலக சமூக சேவைக் கிளையின் ஏற்பாட்டில் பயர் மெட் நிறுவனத் தின் நிதி அனுசரணையின் கீழ் கோப்பாய்ப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு "புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டலத் தொற்று நோய்கள்" எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வுச் செயலமர்வு உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில்கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.நிகழ்வில் மருத்துவ நிபுணர் நிசாகன் வளவாளராகக் கலந்து கொண்டார்.

(ரி-66)

## 31ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 16 . 08 . 1969



மறைவு 05 . 11 . 2023

கடந்த 05.11.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வம்

**அமரர் சிவானந்தம் ஸ்ரீதர்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.12.2023) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் தும்பளை முத்துமாரி அம்மன் கோயில் அந்தியேட்டி மடத்தில் இடம்பெற்று வீட்டுக்கிருத்தியம் இன்றையதினம் முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

(CS 53060 (AK.1)



## கால்வாயாக மாறும் தருமபுரத்திலுள்ள வீதி

### மக்கள் பெரும் அவதி

கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் மத்திய கல்லூரியின் பின்புறமாகவுள்ள வீதி கடந்த 48 வருடங்களாக புனரமைப்பைச் சந்திக்காததால் மழைகாலத்தில் கால்வாய் போல் காட்சியளிக்கிறது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 48 வருடங்களாக இந்த வீதி புனரமைப்புச் செய்யப்படாததால் மழைகாலங்களில் வெள்ளக்கால்வாய் போல் இந்த வீதி மாறுகிறது.

இதனால் இந்த வீதியூடாகப் பயணிப்போர் நாளாந்தத் தேவைகளை முன்னெடுக்க முடியாதுள்ளதுடன் பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் எனப் பலரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இரவுவேளைகளில் விஷப்பூச்சிகளுக்கு அஞ்சி வீடுகளுக்குள்ளேயே முடங்க வேண்டியுள்ளது.

இந்த வீதியைப் புனரமைத்துத் தருவதாக தேர்தல்காலங்களில் வருகைதரும் அரசியல்வாதிகளால் வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றபோதிலும் அவை எவையும் நிறைவேற்றப்படுவதில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நாம் கேட்பது காப்பெற் அல்லது கொங்கிறீட் வீதியோ அல்ல. வெள்ளநீர் வடிந்து ஓடக் கூடியவாறு பாதையை செப்பனிட்டுத் தருமாறே கேட்டுகிறோம் - என்றனர்.

(ச-113)

## நடைபயணம்

நாட்டில் சாந்தி, சமாதானம் வேண்டி பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திர முனைவரை நடை பயணத்தை சிறி ஜனவரத்தனா ராமஜா, பகபராஹ கந்த, அலவத்துகல குருணாகல சேர்ந்த பூஜிய திப்பித்தி கல்லன சோபித கினி தேரர் ஆரம்பித்தார். கடந்த வியாழக்கிழமை காலை இராணுவம் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்புடன் ஆரம்பமான இந்த நடை பயணம் சுமார் 450 கிலோமீற்றர் தொலைவிலுள்ள தெய்வேந்திர முனையில் நிறைவடைந்தது.

(ரி-27-100)



## தமிழ் மக்களின் விருப்பை பிரதிபலிக்காத எம்.பி.க்கள்

### விஜயதாஸ ராஜபக்ச தெரிவிப்பு

வடக்கு - கிழக்கு மக்கள் சமாதானத்தையே கோருகின்றனர். அனைவரும் ஒன்றாக வாழவேண்டும் என்றே விரும்புகின்றனர். ஆனால், தமது அரசியல் இருப்புக்காகவும், வயிற்றுப் பிழைப்பு க்காக வுமே சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவீரர் தினநிகழ்வுகளை நடத்துகின்றனர். அதன் பின்னணியில் அரசியலே உள்ளது என்று நீதிஅமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாம் வடக்கு - கிழக்கு மக்களுடன் வாழ்பவர்கள். அவர்களின் நிலைப்பாட்டை இந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் பிரதிபலிக்கவில்லை. அரசியல் இருப்புக்காகவே இங்கு உரைகள் இடம்பெறுகின்றன.

வடக்கு மக்கள் சமாதானத்தையே கேட்கின்றனர். தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒன்றாக வாழ வேண்டும் என்பதையே விரும்புகின்றனர். இதுதான் வடக்கின் உண்மையான நிலை. தமிழர்களின் இந்தத் தேவை மற்றும் கோரிக்கை இங்கு பிரதிபலிக்கப்படுவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

(எ-44)

## சின்னம் சூட்டும் நிகழ்வு

மன்னார், டிசெ. 5

பறப்பாங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவத்தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஆர்.ரவிகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மன்னார் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் இணைத் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான கே. காதர் மஸ்தான் பிரதம அதிதியாகவும், மடு வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.சி. வொலின்டை, கோட்டக் கல்விப் பணிப்பாளர் அந்தோனிப்பிள்ளை, கிராம அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பெற்றோர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

(ரி-60)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யோகபுரம் மகா வித்தி துணுக்காயில் சாதனை

முல்லைத்தீவு, டிசெ.5

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தில் யோக புரம் மகா வித்தியாலயம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றில் சாதனை படைத்துள்ளது.

வெளியாகியுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை யில் 55 மாணவர்கள் தோற்றி 48 மாணவர்கள் உயர்தரத்துக்குத் தகுதிபெற்றுள்ளனர்.

அதன்படி பாடசாலை மாணவர்களான பு.கார்விழி, ச.அட்சயா, தே.மகிழவன், கே.வாணுஜன் ஆகியோர் 9ஏ சித்தியையும் ர.பிறைவிழி -8ஏபி, ர. மலராஜிதன் -7ஏ2பி சித்தியையும் ஏனைய 42 மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளையும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (ச-19)

## மல்லாவி மத்திய கல்லூரி 4 மாணவர்களுக்கு 9ஏ

முல்லைத்தீவு, டிசெ.5

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றில் முல்லைத் தீவு மல்லாவி மத்திய கல்லூரி மாணவர்களில் 4 மாணவர்கள் 9ஏ சித்தியையும், 04 மாணவர்கள் 8ஏ சித்தியையும் பெற் றுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் 18 மாணவர்கள் சிறந்த பெறுபேறு களைப் பெற்றுள்ளனர். (ரி-75)

## மன்னார் சித்தி விநாயகர் 4 மாணவர்களுக்கு 9ஏ

க.பொ.த. சாதாரண தரப் பரிட்சைப் பெறுபேறுகளில் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மாணவர்களில் 4 மாணவர் கள் 9ஏ சித்தியையும், 7மாணவர்கள் 8ஏ சித்தியையும், 8மாணவர்கள் 7ஏ சித்தியையும் பெற்றுள்ளனர். (ரி-75)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மற்றவர்களை நம்பி எந்த வேலையை யும் ஒப்படைக்கக்கூடாது என்று முடிவெடுப்பீர்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவீர்கள்.

**இடபம்:** கடந்த கால இனிய அனுபவங்களை நினைத்து மகிழ்வீர்கள். பிள்ளைகளின் பொறுப்பு ணர்வு அதிகமாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**மிதுனம்:** சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். சொந்தபந்தங்கள் தேடி வந்து பேசு வார்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**கடகம்:** இங்கிதமாகப் பேசி கடினமான காரியங் களையும் சாதிப்பீர்கள். உறவினர்கள் நண்பர்க ளால் நன்மை உண்டு. நம்பிக்கைக்குரியவர்கள் உதவுவார்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர் கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும்.

**சிம்மம்:** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் இன்று உங்களை அறியாமலேயே ஒருவித தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும். உத்தியோ கத்தில் சக ஊழியர்களால் மறைமுக தொந்தரவு வரக்கூடும்.சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**கன்னி:** கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வாக னம் அடிக்கடி தொந்தரவுதரும். உத்தியோகத்தில் சகஊ ழியர்களிடம் விவாதம் வேண்டாம். எதிலும் கவனம்

**துலாம்:** உங்களின் இலக்கை நோக்கி முன் னேறுவீர்கள். பிரபலங்களால் ஆதாயம் உண்டு. பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட் டிற்குள் வரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள்.

**விருச்சிகம் :** ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சியை அதிகாரி ஆதரிப்பார். மதிப்பு கூடும் நாள்.

**தனுசு:** உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். சிலர் உங்களை நம்பி பெரிய பொறுப் புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயற்படு வார்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**மகரம்:** சந்திராஷ்டமம் இருப்பதால்பழைய கசப்பான சம்பவங்கள் நினைவுக்கு வரும். முக்கியமான கோப்புகளை கையாளும்போது அலட்சியம் வேண்டாம். வியாபாரத்தில் வாடிக் கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**கும்பம்:** கணவன் – மனைவிக்குள் ஆரோக்கி யமான விவாதம் வந்துநீங்கும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். தாய்வழியில் மதிக்கப்படு வீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடை யும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும்.

**மீனம்:** சமயோசிதமாகவும். சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள் பிள்ளைகளால் புகழ் கௌரவம் உயரும். பயணங்கள் சிறப் பாக அமையும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்களின் ஆலோ சனை ஏற்கப்படும். அமோகமான நாள்.

## மகிழங்குளம் வித்தி. முதல்முறை சாதிப்பு

வவுனியா மாதர்பனிக்கர் மகிழங்கு ளம் கனிஷ்ட உயர்தர வித்தியா லயத்தைச் சேர்ந்த மாணவிகளான எஸ்.சர்மிளா - 9ஏ பெறுபேற்றை யும் ஆர்.அட்சிகா - 8ஏபி பெறுபேற் றையும் பெற்று வரலாற்றில் முதற்த டவையாக சாதித்துள்ளனர்.

வவுனியா வடக்கு வலயத்திலுள்ள இந்தப் பாடசாலை வவுனியா நகரி லிருந்து சுமார் 22 கிலோமீற்றருக்கு அப்பால் அமைந்துள்ள பொருளா தாரம் நலிவுற்ற மாணவர்களை மட்டுமே கொண்ட பாடசாலை என் பது குறிப்பிடத்தக்கது. (ச-75)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவித்தல் - 2024
# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 01 | ஆதனவரி | பிரதேசசபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள். | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 2024ம் ஆண்டுக்கான ஆதனவரி சுன்னாகம், உடுவில் உப அலுவலகங்களுக்கான மீள்மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த பெறுமதியின் 14% ஆகவும் ஏழாலை உப அலுவலகத்திற்கான ஆதனவரி வருடாந்த பெறுமதியின் 15% ஆகவும் அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக் கப்பட்டுள்ளது. அதற்கமைய 2024ம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2024ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்த வரியில் 10% கழிவினை பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை குறித்த கந்தாயத்தின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டுவரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் ஆதனவரியை செலுத்தத் தவறின் விறாந்துக்கட்டணமாக வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக்கு 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் ஆதனவரி யுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே குறித்த ஆதனவரிகளை 31.01.2024ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமை யாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 02 | ஆதனப்பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல் | ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்கள் | பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை பிரதேசசபை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். |
| 03 | 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் / பிரசட்டத்தின் கீழ் கட்டட அனுமதி வழங்கல் | பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் | 1. எமது நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் கட்டடங்கள், எல்லைச்சுவர், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசல கூடங்கள், குழாய்க் கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது பழைய கட்டடத்தினை திருத்தவேலை செய் வதாயின் பிரதேசசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்ற பின்னரே அமைக்கப்படல் வேண்டும். தவறின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.<br>2. புதிய கட்டட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும்போது மழை நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் கட்டாயம் அமைக்கப்படுதல் வேண்டும்.<br>3. புதிய கட்டடம் அமைப்பதற்கு உரிய அனுமதி பெற்றவர்கள் அனுமதிபெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியா கா-தவிடத்து அவ் விண்ணப்பதாரிகள் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.<br>4. கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேசசபையின் அந்தந்த உப அலுவலகங்களுக்கு கட்டடம் பூர்த்தி செய்தமை தொடர்பில் அறிவித்து உரிய கட்டணத்தைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் (COC) பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>5. பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக சபை அனுமதியின்றி வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்தர அலங்கார அமைப்புக்கள் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.<br>6. அனுமதியற்ற கட்டடங்களை முறைப்படுத்தி சீர்செய்கை நடவடிக்கைக்கான தண்டப்பணம் 1597/8 ஆம் இலக்க 2009.04.17 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அதிவிசேஷ வர்த்தமானிப்பத்திரிகை பகுதி I தொகுதி (I) பொது அட்டவணை V இன் மேவுதல் அங்கீகாரங்கள் பிரகாரம் அறவீடுசெய்யப்படும். |
| 04 | காணி உப பிரிவிடுகை | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட ஆதன உரிமையாளர்கள் | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 05 | சூழல் பாதுகாப்பு உரிமம் | தொழில் வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2022ஆம் ஆண்டு தை மாதம் 27ஆம் திகதி 2264/18 ஆம் இலக்க அதிவிசேடவர்த்தமானியில் "ஈ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரியகட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| 06 | வியாபார அனுமதிப் பத்திரம் 2024 | பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/தொழில் நிலையத்தவர்கள் | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படி வத்தை உடுவில், சுன்னாகம், ஏழாலை ஆகிய உப அலுவலகங்களில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2024 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade License) பெற்றுக்கொள்ளவும். 31.03.2024ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 07 | துவிச்சக்கரவண்டி உரிமம் | துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் | துவிச்சக்கரவண்டிகள் வைத்திருப்போர் 2024.03.31 ஆம் திகதிக்கு முன் உரிய உப அலுவலகங்களில் உரியகட்டணங்களைச் செலுத்தி 2024ம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| 08 | மிருகங்களுக்கான உரிமம் | வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | வளர்ப்புநாய்கள் வைத்திருப்போர் 2024.03.31ஆம் திகதிக்கு முன் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி பதிவு செய்து 2024 ஆம் ஆண்டுக்கான மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| 09 | விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப் படுத்தல் | விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள், வர்த்தக உரிமையாளர்கள் | பிரதேசசபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேசசபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப் படுத்தவேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும். கட்டண விபரம் பின்வருமாறு:- |

| இல | நிரல் I விபரங்கள் | | நிரல் II அறவிடப்படும் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|---|
| 1. | இலத்திரனியல் விளம்பர பலகைகள் | ஒரு சதுர மீற்றருக்கு | 2,500.00 |
| 2. | இலத்திரனியலற்ற விளம்பர பலகை | ஒரு சதுர மீற்றருக்கு | 1,500.00 |
| 3. | பெயர் பலகைகள் | ஒரு சதுர மீற்றருக்கு | 500.00 |
| 4. | நிலைச்சட்டங்கள் | ஒரு சதுர மீற்றருக்கு | 1,000.00 |
| 7. | விசேட நாட்களில் காட்சிப்படுத்தும் விளம்பரங்கள் | | 50.00 |

| | | | |
|---|---|---|---|
| 10 | வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும் | பாதசாரிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் வியாபாரிகள் | வீதி ஒழுங்கைப்பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக் குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். மேலும் சந்தைச் சுற்றாடலில் இருந்து 500மீற்றர் சுற்றுவட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறி, முட்டை என்பன விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது .சுகாதாரத்திற்கு ஒவ்வாத அனுமதியற்ற நடமாடும் சுண்டல், சோளம் மற்றும் தீன்பண்ட விற்பனை தடைசெய்யப்படுகின்றது. (விசேட சந்தர்ப்பங்களில் உரிய அனுமதி பெறப்படல் வேண்டும்.) |
| 11 | பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல் | உணவு கையாளும் நிலையங்கள் | உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதிபெற்றிருத்தல் வேண்டும்.<br>2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனைதடைசெய்யப்பட்டுள்ளது. |
| 12 | பொது இடங்களில் கழிவுபோடுதலும் டெங்கு நுளம்புப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதும். | பொதுமக்கள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் | திண்மக்கழிவுகளை பிரதேசசபைக்கு ஒப்படைக்கும்போது அவை தரம்பிரித்து வழங்கப்பட வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் முற்றாக தடைசெய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்படல் வேண்டும்.<br>பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் பூமரங்கள் நடுதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 13 | தரகர் முறை நீக்கல் கழிவு நடைமுறைக்குத் தடை | சந்தைக் குத்தகையாளர்கள் | எமது பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக்குத்தகையாளர்கள் வேண்டப்படுகின்றனர், அத்துடன் நிலக்கீழ் விளைச்சல் தவிர்ந்த ஏனைய மரக்கறிகளுக்கு கழிவு முறை முற்றாகத் தடைசெய்யப்படுகின்றது என்பது அறியத்தரப்படுகின்றது. |
| 14 | இரசாயன மருந்து விசிறிய பழங்கள் | வியாபாரிகள் | அனுமதியற்ற நியமங்களை மீறி மருந்து விசிறிய பழங்கள் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 15 | கழிவுநீர் | பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பொது மக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் | பகிரங்க வடிகால்களில் அனுமதியின்றி வீட்டுக்கழிவுநீர், வியாபார கழிவுநீர் சேர்க்கப்பட்டால் சட்டவிரோதமானது என உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 16 | பொதுப் போக்குவ ரத்துக்கு இடையூறாக வும் டெங்கு பரவலுக்கு ஏற்ற வகையில் பெரும் கட்டுமான பொருட் களை வைத்தல். | பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் | பொது வீதியில் சபை அனுமதியின்றி கட்டுமானப் பொருட்கள் சேகரித்து வைத்தல், உரிய குறியீடுகள் காட்சிப்படுத்தாது விடல் மற்றும் டெங்கு நோய்காவி பரவும் ஆபத்தான நிலைமைகளைப் பேணுதல் தவிர்க்கப்படல் வேண்டும். |
| 17 | நடைபாதை வியாபாரிகள் | வீதி ஓரங்களில் தொழில் / வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் | 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 1998.08.23ஆம் திகதிய 520/7ஆம் இலக்கத்தின் அதிவிசேட வர்த்தமானியின் "பகுதி IV (ஆ)" உள்ளூராட்சி அமைச்சர் அவர்களினால் வெளியிடப்பட்டுள்ள துணைவிதிகளின் கீழ் 28 ஆம் பிரிவின் படி வலிகாமம் தெற்கு பிரதேசசபை எல்லைக்குள் கொண்டு திரிந்து வியாபாரம் செய்யும் நடைபாதை வியாபாரிகளுக்கு கீழ்க்காட்டப்பட்ட இடங்களில் மட்டும் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனைய பொது இடங்களில் விற்பனை செய்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.<br>01. இணுவில் பொதுச்சந்தைப்பகுதி<br>02. சுன்னாகம் பொதுச்சந்தைப்பகுதி |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில் புரிபவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்**
**வலிகாமம் தெற்குபிரதேசசபை,**
**சுன்னாகம். 0212240017/ 0212244045**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவித்தல் - 2024

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்கள் வியாபார வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்களின் நிர்வாகிகளுக்குமான வேண்டுகோள்.

| தொடர் இல | விடயம் | அறிவித்தல் |
|---|---|---|
| 1 | ஆதன வரி செலுத்துதல் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 141 முதல் 146 பிரிவுகளின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி மீள்மதிப்பீடு செய்யப்பட்ட அசைவற்ற ஆதனங்கள் தொடர்பான விபரங்கள் 02.12.2016ம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டதன் பிரகாரம் 2024ஆம் ஆண்டிற்கான ஆதன வரியை சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களில் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும்<br>1. ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் வரி செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும்.<br>2. ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தக் காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும்.<br>3.குறித்த காலாண்டிற்குள் அக்காலப்பகுதிக்கான கட்டணம் செலுத்தத்தவறின் தண்டப்பணம் அறவிடப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 2 | ஆதனப் பெயர் மாற்றம் செய்தல் | எமது சபையின் எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டு எமது ஆதன இடாப்பில் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 3 | பட வரைஞர்களைப் பதிவு செய்தல் | 2024ம் ஆண்டிற்கு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2024ம் ஆண்டு ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும். புதுப்பித்துக் கொள்ளவும் தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 4 | கட்டிட அனுமதியும் குடிபுகு சான்றிதழும் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டிடங்கள் , மதில்கள் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டிடத்தினை திருத்துவதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டிடங்கள் மதில்கள் அமைக்கப்பட வேண்டும்.<br>2. புதிய கட்டிடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாதுவிடின் கட்டிட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.<br>3. அத்துடன் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டிடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.<br>5. அனுமதியற்ற கட்டிடங்களுக்கு தண்டப்பணம் அறவீடு செய்யப்படும் அத்துடன் வீதி எல்லைக்கோட்டை பாதிக்கும் மற்றும் சுகாதாரத்திற்கு ஒவ்வாத முறையில் அமைக்கப்படும் கட்டடங்கள் அகற்றப்படும். |
| 5 | வியாபார அனுமதிப் பத்திரம் - 2024 | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருட்களை விநியோகிப்போர் இதுவரை வியாபார விண்ணப்பங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்காவிடில் உரிய விண்ணப்பப்படிவத்தை சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களில் 2024ம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப் அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2024ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 31.03.2024ம் திகதிக்கு முன்னர் வியாபார |
| | | அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 6 | துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக உரிமம் | துவிச்சக்கர வண்டிகள் , வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 31.03.2024ம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2024ம் ஆண்டுக்கான வாகன மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 7 | கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் | சபை எல்லைக்குள் அலைந்து திரியும் கட்டாக்காலிகளை உரிமையாளர்கள் கட்டி வளர்க்க வேண்டும் என்பதோடு கட்டி வளர்க்காதுவிட்டால் சபையினால் பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 8 | பொது சுகாதாரத்தினைப் பேணுதல் | அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள் உள்ள காணிகள் துப்பரவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப்பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். |
| 9 | திண்மக் கழிவுகளை அகற்றுதல் | திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு அவற்றை தமது இடங்களிலேயே சூழலுக்கு பாதிப்பற்ற வகையில் புதைத்து சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அவ்வாறு அகற்ற முடியாதுள்ள உக்காத கழிவுப் பொருட்களை மாத்திரம் தரம் பிரித்து பிரதேச சபை உப அலுவலகங்களில் தொடர்புகொண்டு அவற்றினை அகற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 10 | வீதி ஒழுங்கைப் பேணல் | வீதி ஒழுங்கை பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருள்களை வெளியே வைத்து விற்பனை செய்வது காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500 மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள் ,மரக்கறிகள் , இறைச்சிகள் என்பன விற்பது தடை செய்யப்பட்டுள்ளது. |
| 11 | நீர் வழங்கல் சேவை | பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும். |
| 12 | கனரக வாகன, Rammer சேவை | என்ஜின் றோலர் (Engine Roller), Rammer மற்றும் பைக்கோ (JCB) வாடகைக்கு தேவைப்படுவோர் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். |
| 13 | சூழல் பாதுகாப்பு உரிமம் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டியோர் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும் எற்கனவே உரிமத்தினைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்தினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும். |
| 14 | விளம்பரங்களை அமைத்தல் காட்சிப்படுத்தல் | வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2024ம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களில் இருந்து 01.02.2024ம் திகதிக்குப் பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 15 | தரகர் முறை நீக்கம் | எமது பிரதேச சபை எல்லைக்குள் சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர்கள் வேண்டப்படுகின்றனர். |
| 16 | கழிவுறிஞ்சி வாகன சேவை | மலக்கழிவு தவிர்ந்த ஏனைய கழிவுநீர் அகற்றுவதற்கான சேவை தேவைப்படுவோர் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். |

**ச.பாலரூபன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,**
**சுழிபுரம்.**


## நாஹா மருத்துவ நிலையம்

* தீவிரபாரிசவாதம், முள்ளந்தண்டு பாதிப்பு, மாறாத புண்கள், கணையப்பாதிப்பு, சிறு நீரக செயலிழப்பு, ஆஸ்மா, நீரிழிவு
* குழந்தையின்மைக்கு - அற்புத மருந்தியல்

T.P.: 077 321 2740
வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

## காணி விற்பனைக்கு

K.K.S.றோட் மல்லாகம்
(J-214) 2 1/4 பரப்பு (பழைய சோடா கொம்பனி ஒழுங்கை அருகில்)
விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)
T.P.: 077 753 2994

14th EDITION
வடக்கில் மிகப்பெரிய வர்த்தக கண்காட்சி
THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH
www.jitf.lk
jitf.lk
JITF 2024
JAFFNA INTERNATIONAL TRADE FAIR
19 20 21 ஜனவரி January
10.00 am - 8.00 pm
முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)





MORE INFORMATION
Imalka +94 71 7488107 | imalka@saexhibitions.com
PLATINUM SPONSOR · GOLD SPONSORS · MEDIA SPONSORS · ORGANIZED BY · IN ASSOCIATION WITH
DIMO THE PERFECT PARTNER · NIPPON CEMENT · Capital · LECS LANKA EXHIBITION
SILVER SPONSORS
Anchor · Hayleys Solar · 4ever · PHOENIX · Sera


# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04 . 11 . 1933

மறைவு
05 . 12 . 2013



## குருநாதர் சுந்தரமூர்த்தி

*(திதி: 15.12.2023 (வளர்பிறை திருதியை)*

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும் அப்பா
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
பத்தாண்டுகள் சென்றாலும்
கண்விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மனைவி, மகள்,
பேர்த்திகள், பேரன்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

ஜனனம் 14 . 12 . 1952

மரணம் 05 . 12 . 2021



அமரர்

### மேரி பொலின் ஜெயந்திரா ராஜக்கோன்

வானத்து முழு நிலவாய்
எம் வாழ்வு வளம் பெற
என்றும் ஆசியும், ஒளியும் பொழியும்
அன்பு அம்மாவே – எம் மன
வானில் உங்கள் நினைவுகள்
நீங்காது வலம்வர இறையருள் வேண்டும்.

இல.32,
றக்கா ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

அன்புடன்
கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(53070) AK.1

## 27 ஆவது ஸ்தாபகர் ஞாபகார்த்த நினைவு நாள்



தோற்றம் 25.10.1936

மறைவு 05.12.1996

அமரர்

### பொன் நாகமணி

(மட்டுவில் வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகர்)

நாகமணி என்றொரு மனிதம்
-மலர்ந்தது
மட்டுவில் தெற்கினிலே!!

வளர்மதி என்றொரு
சமூகம் பிறந்தது
அவரின் எண்ணத்திலே
மானிடம் வளர
வழிகள் சமைத்தவர்
சிந்தனை மலர
கலைகள் செய்தவர்

ஒற்றுமை கண்டிட
ஓடி உழைத்தவர்
தடைகள் களைந்திட
அரும் பணிசெய்தவர்
ஆற்றலுடன் பல எல்லைகள்
-கடந்தவர்

ஏணியாய் இருந்து எம் - ஊரை
- வளர்த்தவர்
வாழும் காலங்கள் அவரை
- நினைக்கும்!!

வல்லமையோடு அவர் எண்ணம்
-மலரும்!!
மதி கொண்ட வாழ்வு அவனியில்
-மலரும்!!

காலங்கள் என்றும் அவர் நாமம்
-போற்றும்!!
நினைவுகள் என்றும் அவர் செயல்
-நினைக்கும்

மாறாத எண்ணங்களோடு
நினைவு கூறுகின்றோம்

நிர்வாகம்
மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையமும்,
அதன் உப அமைப்புக்களும்.

# சாதாரணதர பரீட்சை முடிவுகள்

**வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி**

எஸ்.சாத்வீகன் - 9ஏ, க.கௌதமன் -9ஏ, அ.ஜனாத்மன் -9ஏ, ச.வைஷ்ணவி- 9ஏ, ஜெ.சிவசுதன் -9ஏ, சி.தனுசுஜா -9ஏ, ர.சிந்துஜா -9ஏ, உ.கஜானா -9ஏ, கி.காவேரி -9ஏ, அ.றுக்ஷி பிறிசிலா -9ஏ, ஜெ.பாணுப்பிரியா-9ஏ, இ.போகினி -9ஏ, ம.அரவிந்த -8ஏபி, து.கிஷானி -8ஏபி, ஜ.அபிநயா-8ஏபி, கு.துளசிராம்-8ஏபி, நி.கஜனிகா-8ஏபி, க.ஆரபி-8ஏபி, ச.திலகஜோதி-8ஏபி, து.நிவேதிகா-8ஏபி, த.தனுஷகாந் - 7ஏ,2பி, சி.சகானா -7ஏ,2பி, ஜெ.மதுசா -7ஏ,2பி, ச.கலைமதுரா-7ஏ,2பி, தே.சங்கீகன்-7ஏ,பி,சி, சு.திசான் -6ஏ,2பி,சி, ஜீ.மாதுலா -6ஏ,2பி,சி, ச.கோபிகா -5ஏ4பி, கு.தக்சாகினி -5ஏ4பி, தி.சயந்தன் -5ஏ,3பி,சி, றொ.ஜோன்சன் -5ஏ,3பி,சி, வி.அனந்தன் -5ஏ,3பி,சி, ஜெயசீலன் -5ஏ,2பி,2சி

**வட்டு. இந்துக் கல்லூரி**

நவரத்தினம் பிருதிக்ஸா -9ஏ, இளங்கீரன் இசையமுதன் -8ஏபி, தேவபாலன் ஐங்கரன்- 8ஏ,பி,சி, சற்குணராசா டிலக்சனா- 7ஏ,சி,எஸ், முத்துலிங்கம் ஹர்சிகன் -6ஏ,2பி,எஸ், சிவசிறி பரண்யக் குருக்கள் இன்பகௌரிசையா- 5ஏ,2பி,2சி, அன்ரன் ஜோசப்பூராசா பெரெலிலன்-5ஏ,2பி,2சி, சிதம்பரேஷ்வரன் சின்மயி -5ஏ,பி,3சி, செல்வகுமார் அர்ச்சனா- 5ஏ,சி,3எஸ், யோகேந்திரன் நர்மதா 4ஏ,4பி,எஸ்.

**புது. றோ.க.வித்தி**

அ.அகல்யா -9ஏ, இ.ஜதுசன் -8ஏபி. (ம-125-27)

## எம் இனிய உறவுகளே வணக்கம்,

இற்றைக்கு 47 ஆண்டுகளுக்கு மேலாக உங்களின் நிதிப் பங்களிப்போடு இயங்கி வருகின்ற யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் ஆண்டுதோறும் பார்வையற்றவர்களின் பன்முகப்பணிகளுக்காக முன்னெடுத்துவருகின்ற உற்சவகால அதிர்ஷ்ட இலாப செயற்றிட்டத்தினை இந்த ஆண்டும் வர்த்தகப் பெருமக்களின் அனுசரணையோடும். மனித நேயமுள்ள தங்களின் உதவியோடும். எமது பொதுச்சபை உறுப்பினர்களின் பங்களிப்போடும் முன்னெடுத்திருந்தோம். அதன் வெற்றியாளர் தெரிவை நாம் 03.12.2023 அன்று ஊரெழு N.K மண்டபத்தில் நடத்திய சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் நடத்தினோம். அத் தெரிவில் 1ஆம் பரிசான குளிர்சாதனப் பெட்டியை பெறும் அதிர்ஷ்டசாலிக்குரிய இலக்கமாக - 39769 தெரிவு செய்யப்பட்டுள்ளது. 2ஆவது பரிசான Mixer Grinder பெறும் அதிர்ஷ்டசாலிக்குரிய இலக்கமாக - 23045 தெரிவு செய்யப்பட்டுள்ளது. 3ஆவது பரிசான மின்விசிறியைப் பெறும் அதிர்ஷ்டசாலிக்குரிய இலக்கமாக -64570 தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியோடு தெரிவிக்கும் நாம் அதிர்ஷ்டசாலிகளுக்கு வாழ்த்துக்களையும் எம் மீது அக்கறைகொண்ட அனைத்து நண்பர்களுக்கு எமது அன்பையும் பரிமாறி மகிழ்கிறோம்.

வெற்றியாளர்களே உங்கள் பரிசுகளை **30.12.2023** இற்கு முன்பதாக அலுவலக தினங்களில் **காலை 9.30 மணி தொடக்கம் மாலை 04.00 மணி** வரையுள்ள நேரத்துக்குள் தங்களது அதிர்ஷ்ட சீட்டுக்களை கொண்டு வந்து உறுதிப்படுத்தி பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். 30.12.2023 இக்குப் பின்னர் தங்களால் பெற்றுக்கொள்ளப்படாத பரிசில்கள் எமது நிறுவனத்திற்கே சொந்தமானது என்பதையும் தங்களின் மேலான கவனத்திற்கு தெரியப்படுத்துகிறோம். உறவுகளே அடுத்த ஆண்டும் எமது சமூகப் பணிக்கான இச் செயற்றிட்டத்தில் அன்போடும். அக்கறையோடும் பங்களிக்குமாறு தங்களைத் தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

(CS 53072) S-1

## படவரைஞர்களை பதிவு செய்தல் - 2024

வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் புதுப்பித்துக்கொள்ள விரும்புவோர் கீழ்வரும் விடயங்களினைக்கருத்திற்கொண்டு உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 06.12.2023 திகதி தொடக்கம் 29.12.2023 ஆம் திகதி மதியம் 3.00 மணிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை பௌதீக திட்டமிடல் பகுதியில் மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- NVQ-5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை பூர்த்தி செய்துள்ளவர்கள் உரிய சான்றிதழினை சமர்ப்பித்து படவரைஞராக பதிவுகளினை மேற்கொள்ளலாம்.
- ஏற்கனவே 2023 ஆம் ஆண்டுக்கான படவரைஞராக பதிவுசெய்தவர்கள் NVQ-5 Drafting Technology (Buildings) கற்கை நெறியினை தொடர்வதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தினைச் சமர்ப்பித்து பதிவினை புதுப்பித்துக்கொள்ள முடியும்.
- NVQ-5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை பூர்த்தி செய்யாத படவரைஞர்கள் 2024 ஆம் ஆண்டிற்கான புதிய படவரைஞராக பதிவினை மேற்கொள்ள முடியாது.
- மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்களும் 2024 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் தொழிற்பட முடியாது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**குறிப்பு :**

- படவரைஞராக பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவக் கட்டணம் ரூபா 1000.00 + VAT
- உரியவாறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு படவரைஞராக பதிவு மேற்கொள்வதற்கு தெரிவுசெய்யப்படுபவர்களுக்கான கட்டணம் :- ரூபா 5000.00 + VAT
- உரியவாறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு படவரைஞராக பதிவு புதுப்பித்துக்கொள்வதற்கு தெரிவுசெய்யப்படுபவர்களுக்கான கட்டணம் :- ரூபா 3000.00 + VAT

**செயலாளர்**
**வலிகாமம் தெற்குபிரதேசசபை,**
**சுன்னாகம். 0212240017/ 0212244045**

## பெருவிழா நாளை

மிருசுவில் புனித நீக்கிலார் ஆலய நவநாள் உற்சவத்தின் பெருவிழா நாளை காலை இடம்பெறும். இன்று மாலை திருநற்கருணை ஆராதனையும் திருப்பலி பூசையும் இடம்பெற்று நாளை காலை திருநாட்பாடற் பலி பூசையும் திருச்சொரூப பவனியும் இடம் பெறும். (ஒ-9)

## பிக்கு மாயம்

புலத்சிங்கள ஹல்வத்துர சுதம்வர்தனராம விகாரையில் உள்ள பயிற்சி பெற்ற 13 வயதான பிக்கு ஒருவர் காணாமற்போயுள்ளார். கடந்த 21ஆம் திகதி கோவின்னரட்டியால பிரிவேனாவில் கல்வி கற்கச் சென்ற நிலையில் விகாரைக்குத் திரும்பவில்லை என விகாராதிபதி புலத்சிங்கள பொலில் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# போதையின் பாதையில்!

ஊசி மூலமான போதைப்பொருள் நுகர்வின் காரணமாக, யாழ்ப்பாண இளைஞர்களிடத்தில்'குறிப்பாக 17 தொடக்கம் 25 வயதுடையவர்களில்' இருதய வால்வில் கிருமித்தொற்று ஏற்படுகின்றது என்றும், இதனால் இருதயம் செயலிழப்பது அதிகரித்துள்ளது என்றும் மருத்துவத்துறையினர் எச்சரித்துள்ளனர். ஊசிமூலம் போதைப்பொருளை நுகர்வதால் எய்ட்ஸ் தொற்று இளைஞர்கள் மத்தியில் அதிகரிக்கின்றது அல்லது அதிகரிக்கும் அத்தனை ஏதுநிலைகளும் ஏற்பட்டிருக்கின்றது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வட்டாரங்கள் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் அதிர்ச்சித் தகவலொன்றை வெளியிட்டிருந்தன. இந்தத் தகவல் வெளிப்பட்டு, ஓரிரு நாள்களில் அதே சாரப்பட்டதான இருதயநோய் தொடர்பான எச்சரிக்கையும் வெளிவந்திருக்கிறது. இவ்விரு தகவல்களையும் வைத்து அச்சமடைந்தாலும் 'பதற்றமடைந்தாலும், அதில் ஆச்சரியத்துக்கு ஒன்றுமே இல்லை என்பதுதான் உண்மை.

வடக்குமாகாணத்தில், குறிப்பாகயாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் போதைப்பொருளுக்கு ஆட்படுவது சாதாரணமான விடயமாக இன்று மாறிவிட்டது. சிறுவர்கள், யுவதிகள், இளைஞர்கள் என எந்தவொரு வயதுப் பிரிவையும் 'சமூகப் பிரிவையும் போதை மிக இலாவகமாக இரையாக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. சமூகச் சீரழிவுகள், கலாசாரச் சீரழிவுகள் என போதையின் பிடியில் நின்று உழலும் இளைஞர்களையும், யுவதிகளையும் மறுவாழ்வு மையங்களுக்கு அனுப்புகின்ற போதிலும், எந்தவொரு காத்திரமான முன்னேற்றமும் ஏற்பட்டதாகவில்லை. ஏனெனில், போதையைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் திட்டங்களைவிடவும், போதை இளைஞர்களிடத்தில் பரவும் வேகம் அதிகரித்துள்ளது. மட்டுமல்லாமல் மறுவாழ்வுக்கு உட்பட்டோர்கூட மீண்டும் மீண்டும் போதையின் பாதையில் பயணிக்கத் தலைப்படுவது பதிவுகளாக அமைந்திருக்கின்றன.

போதைப்பொருள் பாவனை எவ்வளவுக்கெவ்வளவு சமூக மயப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு நாட்டின் அத்தனைதுறைகளும் நெருக்கடிக்குள் தள்ளப்படும். சுகாதாரத்துறை மட்டும் இதற்கு விதிவிலக்கல்ல. இன்னும் சொல்லப்போனால், சுகாதாரத்துறையின் முழுமையான சரிவுக்கு போதையின் அதீத ஊடுருவல் ஒரு காரணமாக அமையும். ஆதலால், மேற்குறிப்பிட்ட செய்திகளும் தகவல்களும் இத்துடன் முற்றுப்பெறும் விடயமல்ல. இன்னும் வெளிப்படையாகச் சொல்வதாயின் இதுவொரு ஆரம்பப்புள்ளி.

எந்தவொரு நாட்டில் போதைப்பொருள் தலைவிரித்தாடுகின்றதோ அங்கு மருத்துவத்துறைக்கான நிதியொதுக்கீடுகள் அதிகரிக்கும். பணம் தண்ணீராகச் செலவாகும். இதுவே யதார்த்தம். கஞ்சாவைச் சட்டபூர்வமாக்கிய உருகுவே, இன்று கஞ்சாவை விற்றுக்காசாக்கியதை விடவும் கூடுதலான நிதியை போதையால் பாதிக்கப்பட்டோரின் மருத்துவத் தேவைக்காகச் செலவிட்டுக் கொண்டிருக்கின்றது. இதனால்தான் அந்த நாடும், கிட்டத்தட்ட அதேபோன்றதான கொள்கையை உடைய தென்னமெரிக்கக் கண்டமும் அபிவிருத்தியை அடைந்துவிடவில்லை. ஆதலால், இலங்கையில் கட்டற்று ஊடறுத்துத் திரியும் போதைப்பொருள், மருத்துவத்துறையை ஆட்டம்காணச் செய்வதுடன், கஜானாவையும் காலிசெய்யும். இது தொடர்பான தகவல்கள் இனிவரும் காலங்களில் அடுத்தடுத்து அணிவகுத்துவரும். எடுக்கப்படும் எதிர்ப்பு தடுப்பு நடவடிக்கைகளைப் பொறுத்து அதன் 'அடைவு காலம்' வித்தியாசப்படும், அவ்வளவே.




# வரிச்சுமையை கண்டு அச்சப்பட வேண்டாம்!

## சியாம்பலபிட்டிய அறிவுரை

**கொழும்பு, டிசெ.5**

**2024 ஆம் ஆண்டில் இலங்கை விரிவடையும் பொருளாதாரத்துக்குள் நுழையும். மக்கள் வரிச்சுமையைக் கண்டு பயப்படத் தேவையில்லை என அமைச்சர் சியாம் பலபிட்டிய தெரிவித்துள்ளார்.**

பல்வேறு தரப்பினரும் எதிர்வரும் வருடத்தின் பொருளாதார நிலைமை தொடர்பில் பாதகமான கோணத்தில் முன்னோட்டங்களை உருவாக்கி வருகின்றனர் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால், பொருளாதாரத்தை முற்றிலும் எதிர்மறையாகவோ அல்லது நேர்மறையாகவோ பார்க்காமல் நடுநிலையாகப் பார்க்க வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## நாடாளுமன்றை மதிக்காத ரணில்

கொழும்பு, டிசெ.5

மக்கள் ஆணையற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தையோ நீதிமன்றத்தையோ மதிப்பதில்லை. அரசமைப்புப் பேரவைக்கு அழுத்தம் பிரயோகிக்கின்றார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இடைக்கால ஜனாதிபதியொருவருக்கு இவ்வாறு தன்னிச்சையாகச் செயற்பட அதிகாரம் இல்லை. ஜனவரி முதல் மேலும் சில வரிகளை அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகவுள்ளது. அவை வரவு - செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## நீதிமன்ற உத்தரவால் நியமனங்கள் தாமதம்

உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு காரணமாக 25 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் ஒன்பது மாதங்களாக தாமதமாகியுள்ளது என்று கல்வி அமைச்சர் கலாநிதிசுசில்பிரேமஜயந்ததெரிவித்தார். இதனால் எதிர்வரும் பாடசாலை விடுமுறைகள் நிறைவடைவதற்கு முன்னர் தற்போதுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

## மருந்துப் பொருள்களுக்கு புதிதாக விலை நிர்ணயம்

கொழும்பு, டிசெ. 5

மருந்து வகைகளுக்கு விலை நிர்ணயம் செய்வதில் புதிய நடைமுறையைப் பின்பற்றவுள்ளதாக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

தற்போது 60 வகையான மருந்துகளுக்கே கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும், இது மேலும் அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ம-6)

## எம்.பி.க்களுக்கு வரிக்கோவை!

கொழும்பு, டிசெ.5

இலங்கை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 225 உறுப்பினர்களுக்கும் வருமான வரிக்கோவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி செயலகம் இதற்கான நடவடிக்கையில் இங்கியுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம் பலப்பிட்டிய தெரிவித்துள்ளார். மருத்துவர்கள், சட்டத்தரணிகள், கட்டடக்கலைஞர்கள், பிரதேச செயலாளர்கள், பொறியியலாளர்கள், வங்கியாளர்கள் போன்ற ஏனைய தொழில்களில் ஈடுபட்டுள்ள அனைவரிடமும் வரி அறவிடும் போது நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வரி அறவிடாமல் இருக்க முடியுமா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ம)

## விரைவில் சீருடை



கொழும்பு, டிசெ.5

பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகளை புதிய வருடத்தில் பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும், 7 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்களுக்கு அவை வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (எ-இ)

## நாளை

06.12.2023

**புதன்கிழமை**

**கார்த்திகை 20**

சுபநேரம் : 04.47 - 06.17

ராகுகாலம் : 12.17 - 01.47

## நாளொரு நல்வார்த்தை

*ஒரு மனிதன் வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய மிக முக்கியமான பாடம், இந்த உலகம் வலி நிறைந்தது என்பது அல்ல, அதை மகிழ்ச்சியாக மாற்றுவது அவனால் சாத்தியமாகும் என்பதேயாகும்.*

– ரவீந்திர நாத் தாகூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி பகுதித் தலைவர் - ஆரம்ப பிரிவு
அருட்சகோதரி **மேரி நிரஞ்சலி A.C** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி திரேசா ஜோசப்**

அவர்களின் பிரிவுச் செய்திகேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாறுதல் பெற வேண்டுகின்றோம்.

ஆசிரியர் சங்கம்
புனித பத்திரிசியார் கல்லூரி - யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி பகுதித் தலைவர் - ஆரம்ப பிரிவு
அருட்சகோதரி **மேரி நிரஞ்சலி A.C** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி திரேசா ஜோசப்**

அவர்களின் பிரிவுச் செய்திகேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாறுதல் பெற வேண்டுகின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
புனித பத்திரிசியார் கல்லூரி - யாழ்ப்பாணம்.

## மதிய உணவு




வாடிக்கையாளர்களின்
வேண்டுகோளுக்கு இணங்க
மீண்டும்
**சைவ மதிய சாப்பாடு,**
**சைவ பிரியாணி** என்பவற்றைப்
பெற்றுக்கொள்ளலாம் என்பதனை
அறியத்தருகின்றோம்.

(CS 27264) S-1

ராஜா கிறீம் ஹவுஸ்
198, கோவில் வீதி, நல்லூர்.
021-221-4479 / 076-718-2862

## மரண அறிவித்தல்

பிறப்பு
09 . 06 . 1958



இறப்பு
04 . 12 . 2023

**பாக்கியமுத்து வேதக்கண்ணு**
**(சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)**

கே.கே.எஸ் வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மற்றும் கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட வேதக்கண்ணு பாக்கியமுத்து அவர்கள் நேற்று (04.12.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேதக்கண்ணு ராக்கி (இந்தியா) தம்பதிகளின் அன்புப்புதல்வனும், காலஞ்சென்ற செப்ஷ்தியான் பஞ்சவர்ணம் (இந்தியா) தம்பதிகளின் அன்பு மருமகனும், மேரி (இந்தியா) அவர்களின் பாசமிகு கணவரும், ராஜசேகரன், சுதர்சன் (இந்தியா), நிதர்சன், தர்சன் (கனடா), நெல்சன் (டுபாய்) ஆகியோரின் அன்புத்தந்தையும், நிஷாந்தினி, மஞ்சு (இந்தியா), ஜக்வின், ஆர்த்திகா (கனடா), பவித்திரா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இந்தியாவில் வசிப்பவர்களான முத்துமரியா, அருள்ஜோதி காலஞ்சென்ற செபஸ்த்தியான், சாலமன் (கிளி), புஷ்பா, கமலா, தர்மவதி, கமலா, பவானி, ஞானசேகர், பாண்டியன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வியோந்திரன், சாந்தி, முருகோஷ்வரி, பாலு, கனகராஜ், வல்லி, பிரகாஷ், மேஷஸ், சாந்தி, கிரோஸ் ஆகியோரின் மைத்துனரும், ஷைந்தவி, ஜோன்சன், சமிரா, வர்ஷன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.12.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் வேம்பிராய் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
வேம்பிராய்,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 064 9132 , 077 639 3102

(CS 27281) S-1

# பரு.- கொழும்பு பஸ்சேவை பழுதால் அடிக்கடி நிறுத்தம்

## பயணிகள் அசௌகரியம்

யாழ்ப்பாணம், டிசெ.5

பருத்தித்துறை- கொழும்பு இடையிலான பேருந்து சேவை அடிக்கடி தடைப்படுவதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது என்று பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறை டிப்போவிலிருந்து கொழும்புக்குச் சேவையில் ஈடுபடும் பேருந்து அடிக்கடி பழுது காரணமாக தடைப்படுகிறது.

கடந்தமூன்றுமாதகாலத்தில்முன்னறிவித்தலின்றி பலதடவைகள் இந்தப் பேருந்துச் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் ஏற்கனவே முற்பதிவு செய்த பயணிகள், அவசர தேவைகருதி பயணிப்போர் எனப் பலரும் பெரிதும் அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பேருந்துகளுக்கான உதிரிப்பாகங்கள் விலையேற்றம் மற்றும் அதனை கொள்முதல் செய்வதிலுள்ள இடர்பாடு காரணமாகவே உரிய நேரத்தில் பேருந்து சேவையை நடத்தமுடியவில்லை என்று பருத்தித்துறை சாலையால் தெரிவிக்கப்படுகிறது.

அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி இந்தப் பேருந்துச் சேவையை ஒழுங்குமுறையில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-இ)

# வரிச்சலுகைக்கு உடந்தை; எம்.பி.க்களும் பொறுப்பு



கொழும்பு, டிசெ. 5

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியில்தனியார்நிறுவனங்களுக்கு 681 பில்லியன் ரூபா வரிச் சலுகை அளிக்கப்பட்டபோது அதற்கு உடந்தையாயிருந்த மொட்டுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக் கூறவேண்டும் என எதிர்க்கட்சி பிரதம கொறடாவும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

'681 பில்லியன் ரூபா வரிச்சலுகை நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வரிச்சலுகையை அப்போதிருந்த மொட்டுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கவில்லை. அவர்களும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குப்பொறுப்புக் கூறவேண்டும்' - என்றார் கிரியெல்ல. (ஒ-6)

# சர்வதேச ரீதியில் யாழ். மாணவன் முதலிடம்

யாழ்ப்பாணம், டிசெ. 5

யுசிமாஸ் சர்வதேச மனக்கணிதப் போட்டியில் யாழ்ப்பாணத்திலிருந்து பங்குபற்றிய விக்னேஸ்வரன் ருஷாந்தன் என்ற மாணவன் 'சி' பிரிவில் முதலிடம் பெற்றுள்ளான்.

மலேசியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் 80 க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றினர்.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி 60 மாணவர்கள் பங்கேற்றனர், இவர்களில் யாழ்ப்பாணக் கிளையைச் சேர்ந்த விக்னேஸ்வரன் ருஷாந்தன் 'சி' பிரிவில் சர்வதேச ரீதியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளான்.

அத்தோடு திருநெல்வேலி கிளையைச் சேர்ந்த சுதர்சன் அருணன், றஜிப், வைசாளி ஆகியோர் 'ஏ' பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர். (அ-ஒ-இ)

# கார் - ஓட்டோ விபத்து

யாழ்ப்பாணம், டிசெ. 5

அச்சுவேலி - இராச பாதையில் நீர்வேலி மாசுவன் சந்திப்பகுதியில் நேற்றுமாலை இடம்பெற்ற விபத்தில் முச்சக்கர வண்டி கடுமையாக சேதமடைந்துள்ளதுடன் சாரதி காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுதுமலையிலிருந்து அச்சுவேலி நோக்கி சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டியும், நீர்வேலியிலிருந்து அச்சுவேலி நோக்கிப் பயணித்த காரும் மோதின. விபத்தில் முச்சக்கர வண்டி தூக்கி வீசப்பட்டு முற்றாகச் சேமடைந்துள்ளது. (ஒ-23)

## சாட்சி...

நடைபெறும் என யாழ்ப்பாண நீதிவான் அறிவித்தார்.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நேற்று நடைபெற்றது. கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களான நான்கு பொலிஸாரும் அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து பலத்த பாதுகாப்புடன் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கு மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளபோதிலும் ஏற்கனவே எடுத்த தீர்மானத்துக்கு அமைய அடையாள அணிவகுப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும் உயிரிழந்தவருடன் இருந்த பிரதான சாட்சி மன்றுக்கு சமுகமளிக்காத நிலையில் அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடத்த மன்று உத்தரவிட்டது.

இந்த வழக்கு விசாரணைகள் யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்த ராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-20-23-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாள்வெட்டுக்...

(அவர்களும் வன்முறைக் கும்பலுடன் தொடர்புடையவர்கள் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்) இலக்குவைத்து நடத்திய வாள்வெட்டுத் தாக்குதலில் இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்டுள்ளார். அதேவேளை வன்முறைக்குழுவை விரட்டிச் சென்ற பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

நேற்றுத் திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தெல்லிப்பழைப் பொலிஸார் மோட்டார் சைக்கிளில் வாள்வெட்டுக் குழுவைத் துரத்திச் சென்ற நிலையில் வாள்வெட்டுக் குழு மல்லாகம், சுன்னாகத்தை கடந்து கே.கே.எஸ்.வீதி ஊடாக ஹை-ஏஸ் வாகனத்தில் தப்பிச் சென்றுள்ளது. நான்கு தடவைகள் பொலிஸார் வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட நிலையில் வாள்வெட்டுக் குழு தாம் கொண்டு வந்த வாள்களை வீதியில் எறிந்து விட்டுத் தப்பித்துள்ளது.

இதேவேளை - சந்தேகநபர் ஒருவர் தெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சந்தன கமகே 'உதயனுக்குத்' தெரிவித்தார். (அ-ஒ-20-66-125)

## டெங்கு வீரியம்...

யாழ்ப்பாணத்தில் உள்ள அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த ஆண்டு 2 ஆயிரத்து 203 நோயாளிகள் இனங்காணப்பட்டதுடன் இரண்டு இறப்புகளும் பதிவாகியுள்ளன. செப்ரெம்பர் மாதத்தில் 110 நோயாளிகளும், ஒக்ரோபர் மாதத்தில் 118 நோயாளிகளும் நவம்பர் மாதத்தில் 427 நோயாளிகளும் டிசெம்பர் மாதத்தின் முதல் மூன்று நாள்களில் 82 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

நவம்பர் மாதத்தில் கூடிய நோயாளர்கள் நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலேயே இனங்காணப்பட்டுள்ளனர். நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் அதிகளவான நோயாளர்கள் கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி, வண்ணார்பண்ணை ஆகிய பிரதேசங்களில் இருந்து இனங்காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயின் பரம்பல் சடுதியாக அதிகரிக்கும். இந்தச் சூழ்நிலையில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை உடனடியாக துரிதப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலகங்களில் அவசர டெங்கு தடுப்புச் செயலணிக் கூட்டங்கள்இடம்பெற்றன. இதன் அடுத்த கட்டமாக கிராமிய மட்ட டெங்குத்தடுப்பு செயலணிக் கூட்டங்களை உடனடியாக நடத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போதைய காலப்பகுதியில் காய்ச்சல் காணப்பட்டால் உடனடியாக தகுந்த மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் பொது மக்கள் அனைவரும் டெங்குநோயைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பை நல்க வேண்டும் - என்றார். (அ-ஒ-66-100)

## டெங்கு..

கூடிய யாழ்.மாவட்ட டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து அனைத்து இலங்கை டெங்குத் தடுப்பு உதவியாளர்கள் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையினரால் யாழ்.மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரனுக்கான கோரிக்கைகள் அடங்கிய மனுவும் கையளிக்கப்பட்டது. (அ-ஒ-20-66)

## நீதிமன்றில்...

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். நேற்று திங்கட்கிழமை மதியம் குறித்த சம்பவம் இடம்பெற்றது.

மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் துன்னாலையைச் சேர்ந்த பொலிஸ் அலுவலர் நீதிமன்றத்துக்கு சாட்சியமளிப்பதற்காக வந்திருந்தார். அவர் மதுபோதையில் நீதிமன்ற அமர்வில் விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளார். அவரைக் கைது செய்த பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். சந்தேகநபர் இன்று செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன் மருத்துவப்பரிசோதனை மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டது (அ-ஒ-20-26)

## க.பொ.த...

தெரிவித்துள்ளது. நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கு 2023 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் வரவு - செலவுத்திட்ட ஒதுக்கீட்டின் முன்னேற்றங்கள் மற்றும் 2024ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

உத்தேச புதிய கல்வி சீர்திருத்தங்கள் மூலம், ஒவ்வொரு குழந்தையும் 17 ஆண்டுகளில் பாடசாலைப் படிப்பை முடிக்க வாய்ப்பு வழங்கப்படும் என்று கல்வி அதிகாரிகள் தெரிவித்தனர். 4 வயதில் முன்பள்ளியும், ஆரம்பப் பிரிவு 1 முதல் 5ஆம் தரம் வரையிலும், இளநிலைப் பிரிவு தரம் 6 முதல் தரம் 8 வரையிலும், மூத்த பிரிவு தரம் 9 முதல் தரம் 12 வரையிலும் வகைப்படுத்தப்படவிருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குப் பாடசாலை அடிப்படையிலான மதிப்பீட்டுக்கு குறிப்பிட்ட சதவீதத்தையும், பரீட்சையின் ஊடாகக் குறிப்பிட்ட சதவீதத்தை வழங்குவதற்கும் முன்மொழியப்பட்டுள்ள நிலையில், புலமைப்பரிசில் பரீட்சையை இலகுவாக்கி போட்டியை நீக்குவதற்கும் கல்வி அமைச்சு முன்மொழிந்துள்ளது.

மேலும், உத்தேச புதிய கல்விச் சீர்திருத்தங்கள் மூலம், 10ஆம் ஆண்டில் சாதாரணதரப் பரீட்சையையும், 12ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சையையும் நடத்த கல்வி அமைச்சு முன்மொழிந்துள்ளது. சாதாரணதரப் பரீட்சைக்கான பாடங்களின் எண்ணிக்கையை 9இல் இருந்து 7 ஆகக் குறைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த 7 பாடங்களில், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், தொழில்நுட்ப மற்றும் துறைசார் திறன்கள், மத மற்றும் விழுமியங்கள் போன்ற புதிய மூன்று பாடங்களை மேலதிக பாடங்களாகக் கற்பது கட்டாயப்படுத்தப்படவிருப்பது பற்றிய முன்மொழிவும் உள்ளடக்கப்பட்டிருப்பதாகக் கல்வி அமைச்சின் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அதற்காக உயர்தரப் பாடங்கள் கல்விப் படிப்பு, தொழில்சார் படிப்பு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாணவரும் பட்டம் பெறுவதற்கான பாதை தயார் செய்யப்பட்டுள்ளது. கல்விப் படிப்புகளின் கீழ் தற்பொழுது காணப்படும் 6 பாடங்கள் 8 பாடங்களாக அதிகரிக்கப்பட்டு புதிய இரண்டு பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்தது. அத்துடன், நடைமுறைக் கற்கைகளின் கீழ் 10 பாடப்பிரிவுகள் மூலம் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதாகவும், அதன் மூலம் பட்டம் சாராத துறைகளில் சென்று பட்டம் பெறும் வாய்ப்பை மாணவர்கள் பெற்றுக்கொள்வார்கள் என்றும் அதிகாரிகள் இதன்போது சுட்டிக்காட்டினர். (அ-ஒ-இ)

## போதையால்...

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அகிலத்திருநாயகி என்ற வீராங்கனை 72 வயதிலும் சர்வதேசப் போட்டியில் பங்கேற்று தங்கம் வென்றுள்ளார். 72 வயதிலும் சாதிக்கக்கூடியவர்கள் எமது வன்னி மன்னில் இருக்கின்றார்கள் எனில், நிச்சயம் இளைஞர்களும் இருக்கின்றார்கள். அவர்களுக்கான வாய்ப்புகள் உருவாக்கப்படவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் வேறு வழியின்றி, இளைஞர்கள் உயிர்கொல்லி போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகின்றனர். வேறு திசையில் அவர்கள் பயணிக்கின்றனர். தற்கொலை செய்துகொள்ளும் நிலையும் உருவாகியுள்ளது.

உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையில் இருந்து இளைஞர்களைத் தடுப்பதற்கான எந்த வேலைத்திட்டமும் இல்லை. இளைஞர்கள் உயிர்கொல்லிப் போதைப்பொருள் பாவனைக்கு அல்லது விற்பனைக்கு பொலிஸார் உடந்தையாக உள்ளனர். விற்பனையாளர்கள், பாவனையாளர்களை பொலிஸாருக்குத் தெரியும். முகவர்களையும் தெரியும். அது தமிழ்ப் பிரதேசம் எனக் கருதி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. போர்க்காலத்தில் தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டதுபோல தற்போது போதைப்பொருள்மூலமாக மறைமுகமாக கொல்லப்படுகின்றனர் - என்றார். (அ-ஒ-44)

## படைகளின்...

கபளீகரம் செய்வதிலேயே குறியாக இருக்கின்றன. அதன் ஓர் அங்கமாக காரைநகரில் கடற்படையினருக்குக் காணி சுவீகரிக்கும் நடவடிக்கை எதிர்வரும் 12ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் அதை முறியடிக்கும் வகையில் அனைவரும் அன்று காலை 8 மணிக்கு அணிதிரளவேண்டும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், போரைக் காரணம் காட்டி தாயகத்தில் நிலைகொண்ட சிறிலங்காப் படைகள் தற்போது அந்தக் காணிகளை நிரந்தரமாகச் சுவீகரிக்க முயல்கின்றன. காணிகளை விடுவிப்போம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினாலும் அவரது கருத்து செயலுருப்பெறவில்லை. வெறுமனே சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவே அவர் அப்படிக் கூறுகின்றார். சிறிலங்கா அரச இயந்திரத்தின் ஒவ்வொரு திணைக்களங்களும் தமிழர் தாயகத்தை எப்படி வல்வளைப்புச் செய்யலாம் என்பதிலேயே குறியாக இயங்குகின்றன. அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரத்தை வன உயிரிகள் திணைக்களம் சுவீகரிப்பதற்கான முயற்சிகளை ஆரம்பித்திருக்கின்றது.

இதேபோல காரைநகர் நீலங்காட்டு சந்தியில் கடற்படையினரின் முகாமுக்காக தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமிப்பதற்கு எதிர்வரும் 12ஆம் திகதி நில அளவீடு முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

எமது அப்பு ஆச்சியர் ஆண்ட மண்ணை அந்நியரிடம் இழக்கமுடியாது. நிலத்தை மீட்டுக்கும் இந்தப் போராட்டத்தில் அந்தக் காணி உரிமையாளர்கள் மாத்திரமல்ல பொதுமக்களும் பங்கேற்று ஆதரவு தரக்கோருகின்றேன்- என்றுள்ளது. (அ-ஒ-125)

## தாய்ப்பால்...

மருத்துவமனையில் மருத்துவக் கண்காணிப்பில் இருந்து வந்த நிலையில் இவ்வாறு உயிரிழந்துள்ளது. கடந்த 24ஆம் திகதி மாலை 5 மணிக்கு தாய்ப்பால் கொடுத்தபோது அது புரையேறி குழந்தை வாந்தி எடுத்துள்ளது. இது குறித்து மருத்துவரிடம் தெரிவித்தபோது இனிமேல் பால் கொடுக்கவேண்டாம் என மருத்துவர் கூறியுள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுகிழமை முற்பகல் குழந்தை உயிரிழந்துள்ளது. இறப்பு தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டிருந்தார். குழந்தையின் சுவாசக் குழாய்க்குள் பால் சென்றமையாலேயே குழந்தை உயிரிழந்திருப்பதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-100)

## சிறாருக்கு...

குப்பிக்கு ஒப்பான பொருளையும் அணிவித்து சிறார்களை பயங்கரவாதிகளாக்கி இருந்தனர். இது இந்த நாட்டில் நடந்திருக்கக்கூடாத சம்பவமாகும். போர்க்காலத்தில் சிறார்களை புலிகள் அந்த அமைப்பில் இணைத்துக்கொண்டனர். நாம் இன்னும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. அதனால்தான் சிறார்களின் கழுத்தில் சயனைட்டுக்கு ஒப்பான பொருளை மாட்டிவிட்டு, பயங்கரவாதிகள் நினைவுகூரப்படுகின்றனர் - என்றார். (அ-ஒ-44)

## அகற்றப்பட்டது...

எழுதவில்லை என ஆசிரியர் தடியால் அடித்துள்ளார். இதன் காரணமாக கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மாணவன் சேர்க்கப்பட்டுள்ளான். நேற்றுமுன்தினம் சத்திர சிகிச்சை மூலம் நகம் அகற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கடந்த சனிக்கிழமை அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் உத்தியோகபூர்வ இலக்கத்துக்கு அழைப்பெடுத்தபோது கடமையிலிருந்த அதிகாரி முறைப்பாடு கிடைக்கப் பெற்றதை உறுதிப்படுத்தினார்.

இதேவேளை - யாழ். வலயக் கல்விப் பணிமனையால் ஆசிரியரிடம் நேற்று முன்தினம் விசாரணை முன்னெடுக்கப்பட்டதாக வலயக் கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டார். (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாட்சிக்கூண்டுகள்

# நீதிமன்றில் நீக்கம்

### நீதியமைச்சர் தகவல்

**கொழும்பு, டிசெ. 5**
**சாட்சிகள் நீதித்துறை செயற்பாட்டுக்கு உதவும் குடிமக்களே. அந்த வகையில் நீதிமன்றங்களிலுள்ள சாட்சிக்கூண்டுகளை இந்த ஆண்டுக்குள் அகற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

- இவ்வாறு நீதியமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ச ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.
நீதிமன்றம் என்பது பயத்துடனும் சந்தேகத்துடனும் செல்லும் இடமல்ல.
நீதிமன்றத்தின் முன் சாட்சியமளிக்கும் அனைவரும் குற்றவாளிகள் அல்லர்.
எனவே, கூண்டில் இருந்து சாட்சியமளிக்கும் 'கூண்டு முறை' மாற்றப்பட்டு, கண்ணியமான முறையில் சாட்சியம் அளிக்கும் முறை இந்த ஆண்டு இறுதிக்குள் தொடங்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)




யாழ்ப்பாணம், டிசெ. 5
தேசிய மட்டப் போட்டியில் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்த மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மாணவர்களை கௌரவிக்கும் நடைபவனி அண்மையில் நடைபெற்றது. (ரி-100)

# நட்டத்தில் இயங்கும் மத்தள அபிவிருத்தி செய்யப்படவேண்டும்

### துறைசார் அமைச்சர் கூறுகிறார்

மத்தள விமானநிலையம் நட்டத்தில் இயங்கினாலும் அது அபிவிருத்தி செய்யப்படவேண்டும் என துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். '2017 - 2023 காலப்பகுதியில் மத்தள விமானநிலையத்தில் இரண்டு பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.
உலகத்திலுள்ள எல்லா விமானநிலையங்களும் இலாபத்தில் இயங்கவில்லை. மத்தள விமானநிலையம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்' - என்றார் பந்துல. (ஒ-6)

# களனி பல்கலைக்கழக கற்கைகள் நிறுத்தம்

கொழும்பு, டிசெ.5
களனிப் பல்கலைக்கழகத்தின் கற்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு அதன் நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.
களனிப் பல்கலைக்கழகம் இன்று பிற்பகல் 2 மணி முதல் மறு அறிவித்தல் வரை மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனையவை மூடப்படும் என களனிப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் அறிவித்துள்ளார்.
அனைத்து விடுதி மாணவர்களும் இன்று காலை 5 மணிக்கு முன்னதாக தங்கும் விடுதிகளைவிட்டு வெளியேறவேண்டும் என்று உரிய அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## புலமைப் பரிசில் பெறுபேறு

வவுனியா, டிசெ. 5
கடந்த புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில் வவு னியா கல்மடு படிவம்2 பாடசாலை மாணவன் ர.றோசன் 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார். (ரி-75)

**பெண் பணியாளர்கள் தேவை**
மிக்சர் கொம்பனிக்கு பெண் பணியாளர்கள் தேவை .
076 583 0277

**உடனடி வேலைவாய்ப்பு (PVT) Ltd.**
அரச அங்கீகாரம் பெற்ற எமது (PVT) Company யில் 05 வகையான பதவிகள், 18 பேருக்கு முன்னுரிமை. உடன் தொடர்புகொள்ளவும்.
வயதெல்லை : 21-36 வரை
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
075 910 6973



முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி மற்றும் வழிகாட்டல் வழங்கும் செயற்றிட்டம் முல்லைத்தீவு மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பங்குபற்றிய அறநெறி ஆசிரியர்களுக்கு சான்றிதழ் மற்றும் ஆன்மிகம் சார்ந்த புத்தகங்கள் என்பன வழங்கப்பட்டன. (ம-75)

**வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்**
DHL சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528

# றொஷானுக்குப் பயந்தே ஐ.ம.ச. முற்கூட்டிய தீர்மானம்

### பிரசன்ன ரணதுங்கவின் கண்டுபிடிப்பு

கொழும்பு, டிசெ. 5
றொஷான் ரணசிங்க பொதுவேட்பாளர் ஆகிவிடுவார் என்ற அச்சத்தில்தான் தமது கட்சி வேட்பாளரை ஐக்கிய மக்கள் சக்தி முன்கூட்டியே அறிவித்துள்ளது என்று ஆளுங்கட்சி பிரதம கொறடாவும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த இரு வாரங்களாக றொஷான் ரணசிங்கவை பயன்படுத்தி ஐக்கிய மக்கள் சக்தியினர் அரசியல் செய்தனர். அவர் பொதுவேட்பாளர் எனத் தெரிவித்துவிட்டதால், பதறி அடித்துக்கொண்டு சஜித்தான் ஜனாதிபதி வேட்பாளர் என ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. இதுதான் அவர்களின் அரசியல் - என்றார். (ஒ-44)

**காணி விற்பனைக்கு**
நல்லூர் கோவிலில் இருந்து 2 km தூரத்தில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
**நிலப்பரப்பு**
- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.
திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.
பார்வையிடும் நேரம்:- காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
தொடர்புகளுக்கு:- ஜெயம்
077 814 7389,077 986 5457


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்[illegible] 361 [illegible]த்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org